புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# பத்துப்பாட்டில் வழிபடும் தெய்வங்களின் இடங்கள்

*மு.பிருந்தாவனம்,*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*
*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் -635601*

ஆய்வுச்சுருக்கம்

பத்துப்பாட்டு நுல்கள் பழந்தமிழரின் வாழ்வியலை வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு அரிய தகவல்களைக் கொண்டுள்ளது. பத்துப்பாட்டு நூல்களில் பழந்தமிழர் எவ்வாறு தெய்வ வழிப்பாட்டையும் அவற்றிற்கான இடங்களையும் தேர்வு செய்தனர் என்பதனை இக்கட்டுரையில் காண்போம். இயற்கை தெய்வ வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாட்டு இடங்கள் என பத்துப்பாட்டில் மிளிர்கின்றன.இயற்கை தெய்வங்களான மரங்கள், நீர்நிலைகள், ஊர்மன்றங்கள், நாற்சந்தி, முச்சந்தி, ஊருணி, துறைகள் போன்ற பல்வேறு இடங்களை தெய்வங்களாக வழிபடும் வழக்கம் இன்றும் தொடர்வதைக் காண முடிகிறது. இப்பண்பாடுகளில் சடங்கு முறைகள், இறந்த வீரனுக்கு நடுகல் எடுப்பதும் அவர்களை வழிப்படும் வழக்கம் மக்களிடம் காணப்படுவதை அறியமுடிகிறது.

கலைச்சொற்கள்

அணங்கு, ஊருணி, சதுக்கம், மன்றம், மாயோன், சேயோன், கொற்றவை போன்ற கலைச்சொற்களை இக்கட்டுரையில் காணமுடிகிறது.

## முன்னுரை

தெய்வ நம்பிக்கை என்பது மக்களிடையே தொன்றுதொட்டு வேரூன்றித் தொடர்ந்து நிலைபெற்று வருகின்றது. மனிதன் இயற்கையோடு போராடி வாழும் இயல்புடையவன். ஆகையால் வழிபாடும் வழிபாட்டிற்குரிய இடங்களும் அவனோடு இரண்டிறக் கலந்த ஒன்றாகவே அமைகின்றது. மக்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சக்திகளில் தெய்வத்தைக் கண்டனர். காடு, மலை, நீர், மரம், நிலம், கடல், கல் ஆகிய இடங்களில் தெய்வங்கள் உறைவதாக மக்கள் நம்பிக்கை வைத்து உள்ளன. மக்களின் வாழ்கைக்கு இன்றியடையாத தெய்வ உணர்வுகளையும், வழிபாட்டு நெறிகளை பற்றி பத்துப்பாட்டு நூல்களில் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றன. கொற்றவை வழிபாடும், நடுகல் வழிபாடும் அத்தெய்வங்களின் வழிபாட்டிற்குரிய இடங்கள் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் காணக்கூடிய ஒன்றாகும். உருவ வழிபாடு மற்றும் உருவத்தை அடிப்படையாக கொண்ட கடவுள் வழிபாடு . தெய்வம் இருக்கும் இடங்களை ஆராய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இறை வழிபாடு

வழிபாடு என்பது வணங்குதல், கடம்படல், போற்றுதல், ஏத்துதல், வேண்டுதல், பிரார்த்தனை முதலிய சொற்களின் பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகும்.

வழிபாடு என்னும் சொல்லிற்கு ‘‘வணங்குதல்’’, ‘‘பின்பற்றுதல்,’’ என இருவேறு பொருள்கள் உள்ளன. வழிபாடு என்பது ‘‘வழியிற்படுதல்’’ அல்லது ‘‘ஒரு வழிப்படுதல்’’ என்பது பொருளாகும் தமிழ் அகராதி வழிபாடு என்ற சொல்லிற்கு ‘‘வழியிற் செல்லுகை’’, பின்பற்றுகை, வணங்குதல்’’ என முப்பொருளை உரைக்கிறது. அமைந்து திரியும் மனதை ஒரு நிலையில் நிறுத்தி ஒரே வழியில் நிலைபெறச் செய்வதே வழிபாடாகும்.

“வழிபாடு என்பதன் சொற்பொருள் கடவுள் வழியில், கடவுள் நெறியிற்படுதல் அல்லது செல்லுதல் என்பாகும்.

“வழிபாடு என்பது நாம் வழிடும் கடவுள் பற்றி மனத்தான் பாவித்துப் புறத்தொழில் எதுவுமின்றி மனத்தால் வழிபடுதல்” என்ற கருத்தையும் கோ. தண்டபாணி பிள்ளை கூறிள்ளார். “வழிபாடு என்பது சிந்தனை, புத்தி, மனம் ஆகியவை ஒருங்கிணைத்து ஒரு வழியிற் செல்லுதல்” என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் “வழிபாடு” என்பதன் பொருளை விரிவாகக் கூறியுள்ளதைக் காணலாம்.

மக்கள் தெய்வம் எல்ல இடத்தையிலும் அமைந்துள்ளன நம்பிக்கை வைத்து உள்ளன. எல்லாப் பொருள்களுக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தி உள்ளதாக உணர்ந்த மனிதன். பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளையும், வழிபாட்டிற்குரிய இடங்களாக கண்டறிந்து வந்துள்ளான். அவ்விடங்களைக் குறித்து சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

வழிபாடு என்ற சொல் “வழிபாடு” என்னும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். ஒரு செயலைச் செய்வதற்கு முன்பும், தான் நினைத்த காரியம் (அ) செயலானது நிறைவேறுவதற்கும் இறைவனை வழிபாடு செய்யக்கூடிய நிலையானது ஏற்பட்டது.

நிலங்களின் இயற்கை அமைப்பை ஒட்டி அவற்றை நிலங்களை ஐந்தாகவும் பகுத்தனார். அவ்வந்நில மக்களின் சூழ்நிலைக்கு ஏற்றப்படி தெய்வங்களை அமைத்துக்கொண்டனார். அவ்வந் நிலத்தில் வாழ்கின்ற மக்களின் தொழில் நிலைக்கு ஏற்பவே திணை நிலத்தெய்வங்கள் அமைந்துள்ளமையை அறிய முடிகின்றது. மருத நிலத்து மக்கள் பயிரிடும் தொழிலுக்குத் துணையாக இந்திரனை வழிபட்டனர்.

தொல்காப்பியர், தமிழர் நிலத்தின் அடிப்படையில் தெய்வங்களைப் பிரித்து வணங்கியுள்ள செய்தியைத் தெளிவுப்படுத்துகிறார். இதனை,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீன்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”

என்னும் நூற்பா மூலம் அறியலாம்.

முல்லை – திருமால், குறிஞ்சி – முருகன், மருதம் – இந்திரன், நெய்தல் – வருணன் என நில அடிப்படையில் தெய்வங்கள் அமைந்து உள்ளன.

இயற்கைச் சூழலில் வழிபாடும் இயற்கையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. மக்கள் அச்சத்தை விளைவிக்கும் சக்தி பெரும்சக்தி என்று நம்புகின்றனார். இதனால் மலை, காடு, மரம், கடல் ஆகிய இடங்களில் தெய்வங்கள் இருக்கும் இடமாக நம்பி வழிபாடு செய்துள்ளனர்.

### இயற்கை வழிபடும் இடங்கள்

சங்க கால மக்கள் இயற்கையில் ருந்து தன்னை வேறுபடுத்தி கொண்டு வளர்ச்சியடைந்த போது இயற்கையையே கடவுளாகக் கருதி வழிபடவேண்டிய சூழல் ஏற்பட்டது. ஐந்திணை நிலப்பரப்பில் மலை, காடு, நீர்நிலைகள் கடல் சார்ந்து வாழ்ந்து வந்த சங்க காலத்து மக்கள் மரங்கள், மலை முகடுகள், சுனைகள், கடலடகரை, ஆட்கள் புழக்கமற்ற காடுகள், இரவு நேரம் போன்றவற்றில் கண்களுக்குப் புலப்படாத சக்திகள், உறைந்திருப்பதாக நம்பினர்.

மக்கள் தங்களைச் சுற்றிலும் அமைசத்து இயற்கை வனப்புகளில் தெய்வத்தை வழிபட்டுள்ளனர். அருவே, உருவ வழிபாட்டு முறையும், வழிபாட்டிற்குரிய இடங்கள் தமிழர்களிடையே இருந்துள்ளதை அறியமுடிகிறது.

சங்க கால மக்கள் காடு, மலை, மரம், நீர், கடல் ஆகிய இடங்களிலும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்திகளிலும் இறைவனை வழிபட்டுள்ளனர். மேலும், அம்பலத்திலும் மரக்கட்டையிலும் தெய்வத்தை வழிபாட்ட இடமாக அறிய முடிகிறது.

“காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்” (திருமுருகு 223-224)

என்ற பாடல் வரிகள் இறைவன் எல்லா இடங்களிலும் உறைவதனால் வழிபாடு நிகழ்த்தியதைக் குறித்து அறியலாம். மேலும் பதிற்றுப்பத்தில்,

“மலையும் மரமும் மரதடசெற் காலம்
காடும் மேடும் கள்ளியும் புதரும்
சுனையும் துருத்தியும் சுழியும் கடலும்
நாடும் ஊரும் நல்மனை இடங்களும்
உலந்துறை கடவுளர் கட்சியும் உளவே” (பதிற்றுப் 21)

என்ற பாடல் வரிகள் மூலம் மக்கள் தாம் கண்ட பொருள்கள் யாவற்றையும் தெய்வத்திற்கு நிகராகப் போற்றியதும். அவைகளின் மூலம் தெய்வத்தைக் கண்டதை உணர முடிகிறது. மலை,காடு, சுனை, ஆற்றிடைக்குறை கழி, கடல், யாழ், முரசு, ஆயதம் ஆகிய இடங்களிலும் தெய்வம் உறையும் இடங்களாக நம்பிக்கை வைத்து உள்ளனர்.

அணங்கு உறையும் இடங்கள்

அணங்கு என்பதற்கு “அச்சம் தெய்வப் பெண், தேவர்களாடும் கூத்து” எனப் பல தருகிறது தமிழ்மொழி அகராதி.

“அணங்கென்பன பேயும் பூதமும்
பாம்பும் ஈறாகிய பதினெண்
கணனும், நிரய பாலரும் பிறரும்
அவணங்குதற் றொழிலராகிய
சவத்தின் பெண்டிர் முதலாயினாரும்
உருமிசைத் தொடக்கத்தைவும்” (தமிழ் அகராதி 46)

எனப்படும் எனத் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரையில் பேராசிரியர் சுட்டுகிறார். அணங்கு என்பதற்கு “இணங்குதல்” என்னும் பொருளும் உண்டு. அச்ச உணர்வைத் தூண்டிப் பிறரைத் தம் வயத்தில் இணங்கச் செய்யும் பொருளத்தையும் முன்னோர்கள் அணங்கு எனக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

அணங்கு, சூர், சூலி, முருகு போன்ற கடவுள்கள் இயற்கை சார்ந்த இடங்களில் தங்கி இருப்பதற்கான நம்பிக்கை சங்க காலத்தில் அதிகமாக நிலவியது எனலாம். அணங்கு என்பது தெய்வங்களையும், அத்தெய்சத்தால் ஏற்படும் அச்சத்தையும் குறிக்கிறது.

அணங்கு, வரையர்மகளிர், சூர் போன்ற ஆற்றல்கள் குறிப்பாகப் பெண்களைப் பிடித்துக்கொண்டு அவர்களுடைய உடலினை மெலிவித்துக் கேடு செய்கின்றனவாகக் காருதபட்டன. அதன் காரணமாக தான் அணங்கை வழிபாடு செய்தனர். இலக்கியங்களில் அதிக அளவில் அணங்கு என்ற தெய்வத்தையே பொருளாகக் காட்டி கூறியுள்ளனார்கள். இதனை,

“அணங்கு சால் உயர்நிலை தழீஇ பண்டைதன்” (திருமுருகு. 289)
“அணங்கு மெய் நின்ற அமைவரு காட்சி” (பொருநர். 20)
” அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து (பொருநர். 35)
“துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்து ஆநகு (பொருநர். 459)

என்னும் பாடல் அடிகளில், அணங்கு என்பது தெய்வத்தை குறிப்பதாக அறிய முடிகிறது. மேலும்,

“ஆண் தலை அணங்கு அடுப்பின்” (மதுரைக் 29)
“அஞ்சுவார தட்கும் அணங்கு உடை துப்பின் (மதுரைக் 140)
“அணங்கு வீழ்வு அன்ன பூ தொடி மகளிர்” (மதுரைக் 446)
“மணம் புணர்ந்து ஓங்கிய அணங்கு உடை தோட்டி (மதுரைக் 693)

என்ற பாடல் வரிகள் அமைந்து உள்ளன. வீரரது தலை நோக்குவாரை அணங்குறுத்தும் அதாவது துன்புறுத்தும் அடுப்பாக உருவகிக்கப் பெற்றுள்ளது. ஆங்குச் சினமென்னும் நெருப்பில், பகைவர் குருதியாகிய உலை கொதித்துப் பொங்கும் என்று உருவகப்பத்தி உரைக்கின்றார் புலவர் மேலும் ,பகைவைரை வழிசெல்வி விடாது துன்புறுத்தலின் அரணிடத்துள்ள பெரிய வாயிற் கதவுகளின் “வலிமைத் தன்மை” பகைவர்களுக்கு அணங்காகிய நிலை சுட்டப்பெறுகின்றது. மேலும், கண்களாற் புலனாகாத அணங்குகள் உறையும் இடங்களாக இலக்கியங்கள் சிலவற்றைச் சுட்டுகின்றன.

“பொரிப்பூம் புன்கி னெழில்தகை யண்முறி
சுணங்கணி வனமுலை அணங்கு கொளத்திமிரி” (நற். 9 : 5-6)

என்ற அடிகளில் மார்பின்கண் உறையும் வீற்று தெய்வம் சிறப்போடு விளங்கும்படி புன்கினது தளிரைப் பெண்கள் தம் மார்பில் பூசிய செய்தியைக் கூறுகிறது. இங்கு அமைந்து இருக்கும் தெய்வம் அணங்கெனவே குறிப்பிடப்படுகிறது.

கடற்றுரையில் உறையும் தெய்வமாக அணங்கை கீழ்வரும் பாடல்கள் உண்டு

"அணங்கு உடை பனிதுறை தொண்டி அன்ன" (ஐங்குறு 174 :1)

"அணங்கு உடை முந்நீர் பரந்த செறுவின்" (அகம். 207 :1)

நீராடுந்துறையிலும், ஊருணித்துறையிலும் அணங்கு தெய்வமாக உறைந்துள்ளதை.

"அணங்கு உடை கடம்பின் முழு முதல் தடித்து" (பதிற்று.88 : 6)

என்றும், யாழ்களின் வழியேயும் அணங்கு உறைவதை

"மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்கு மெய்ந் நின்ற அமைவரு காட்சி" (பொருநர். 19-20)

என்ற அடியில், தந்தக் கட்டில், யானையின் மத்தக்கம். சுரவின் கொம்பு , இல்லங்கள், அரண்மனை வாயில் நிலைகள் போன்ற இடங்களிலெல்லாம் அணங்குகள் விரும்பி உறை இடமாகும்.

ஊர்களில் உறையும் தெய்வம்

சங்க கால மக்கள் தாங்கள் வாழும் ஊர்களிலுள்ள சதுக்கங்களிலும், சந்திகளிலும், எல்லோரும் கூடும் மன்றங்களிலும், வாழும் இல்லங்களிலும் தெய்வங்கள் இருக்கும் இடமாக எண்ணி வணங்கி என்பதை,

"சதுக்கமும் சந்நியும் புதுப் பூங்கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்" (திருமுருகு. 225-226)

என்ற பாடல் அடிகள் காணலாம். சதுக்கம் என்பது நான்கு தெருக்கள் கூடுமிடமாகும். சந்தி என்பது முச்சந்திகளைக் குறிக்கக் கூடிய இடமாகும். ஊருக்கு நடுவில் எல்லோரும் வந்து கூடுவதற்கு பயன்படும் மரத்தடியே அல்லது மன்றத்தின் தெய்வங்கள் அமைவது உண்டு.அந்த மன்றம் ஊருக்கு நடுவில் அமைந்துள்ளன.

ஊர்களில் இருக்கும் அம்பலங்கள் பாழாயினமையால் அங்கே குடி இருந்த தெய்வங்கள் இடம் பெயர்ந்து வேறு இடத்திற்கு சென்று அமைந்து வழிபடுகின்றனர். இதனை,

"கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்" (புறம். 52 : 12-13)

என்னும் பாடலடிகளில், கந்து தெய்வம் உறையும் இடமாக வணங்கப்பட்டு வந்ததை அறியலாம்.

முடிவுரை

தெய்வத்தைப் போற்றுவது என்பது அச்சத்தால் ஏற்பட்ட ஒன்று. தகாத செயல் செயல்பவரையும், தீய செய்ல்களைச் செய்வதையும் தெய்வம் வருத்தும் என்று நம்புகினர். இதன் காரணமாக தான் அச்சம் தரும் கடவுள்களாகிய அணங்கு, சூர், கொற்றவை முதலிய பெயர்களால் அழைக்கப்பட்ட தெய்வங்களுக்கு வழிபாட்டிடங்களை வகுத்து வணங்கி வந்துள்ளதை நாம் அறிய முடிகின்றது. வீரமும், வெற்றியும் எவ்வகையில் ஒன்றுபட்டிருந்தன என்பதற்குக் கொற்றவை வழிபாடு சிறந்தாக அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்


1. சுப்பிமணியன். ச.வே, ப.ஆ, தமிழ் அகராதி, ப-206
2. நச்சினர்க்கியர் உரை தொல்காப்பியம், பொருள் நூற்பா 5, ப-11
3. நாகராசன். வி, குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2004.
4. சுந்தர சண்முகனார், திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும்
5. துரைசாமிப்பிள்ளை.சு ஔவை, பதிற்றுப்பத்து, கழக வெளியீடு சென்னை.
6. ஜகந்நாதன் .கி.வா, பொருநர் ஆற்றுப்படை, அழகு நிலையம் லிமிடெட், சென்னை-600014.
7. மேலும் பா-35
8. மேலும், பா-459
9. கதிர் முருகு.டாக்டர், மதுரைக் காஞ்சி மூலமும் உரையும், சாராதா பதிப்பகம், பா-29.
10. மேலும், பா-140
11. மேலும், பா-446

12. மேலும், பா-693
13. பாலசுப்பிரமணியம், நற்றிணை மூலமும் உரை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை. பா-9 : 5-6.
14. தட்சிணாமூர்த்தி.அ, ஐங்குறுநூறு மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை. பா-174 : 1.
15. செயபால்.இரா, அகநானூறு மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை. பா-207 :1
16. துரைசாமிப்பிள்ளை.சு ஔவை, பதிற்றுப்பத்து, கழக வெளியீடு சென்னை.பா 88 : 6
17. ஜகந்தாதன் .கி.வா, பொருநர் ஆற்றுப்படை, அழகு நிலையம் லிமிடெட், சென்னை-600014. பா-19-20.
18. சுந்தர சண்முகனார், திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும். பா-225-226.
19. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிமிடெட், சென்னை. பா-207 : 12-13

********* ********* ********** ********* ********* ********** ********** **********